**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**அசல் வழக்கு எண்.41/2023**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 04 ஆம் நாள் திங்கள் கிழமை வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. பி.மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | விவேகானந்தன் (வாதியின் அதிகார முகவர்) | த/பெ.: | பி.வி.இராமமூர்த்தி |
| கிராமம்: | உதயமார்த்தாண்டபுரம் | தாலுக்கா: | முத்துப்பேட்டை |
| மதம்: | இந்து | தொழில்: | தனியார் வேலை |
| வயது: | 42 | முகவரி: | உதயமார்த்தாண்டபுரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 04.08.2025.

**முதல் விசாரணை :–**

நான் அசல் வழக்கில் வாதியின் அதிகார முகவர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. 09.07.1987–ல் வாதியின் கணவர் இராமமூர்த்திக்கு நடராஜன் மனைவி கமலா எழுதிக் கொடுத்த அனுபவ கிரயப்பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். 09.07.1987–ல் தாவா சொத்திற்கு நடராஜன் மனைவி கமலா, உதயமார்த்தாண்டபுரம் கிராம நிர்வாக அலுவலரிடம் அனுபவ மாற்றம் கோரி அளித்த மனு கை நகல் **வா.சா.ஆ.1** ஆகும். 23.04.2007–ல் வாதியின் கணவர் இராமமூர்த்தி இறப்புச்சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். 12.10.2016–ல் வாதியின் மகன் மணிகண்டன் பேரில் உதயமார்த்தாண்டபுரம் ஊராட்சி தலைவர் வழங்கிய தொழில் உரிமம் அசல் **வா.சா.ஆ.2** ஆகும். 2016–2017ம் ஆண்டிற்கு வாதியின் மகன் மணிகண்டன் பெயரில் வீட்டுவரி செலுத்தியதற்கான ரசீதுகள் (எண்ணிக்கை–3) **வா.சா.ஆ.3** ஆகும். 23.01.2018–ல்

தாவா சொத்திற்கு இராமமூர்த்தி பெயரில் உள்ள மின் இணைப்புக்கு மின் கட்டணம் செலுத்தியதிற்கான கணினி நகல் **வா.சா.ஆ.4** ஆகும். 23.01.2018–ல் தாவா சொத்திற்கு நடராஜன் பெயரில் உள்ள மின் இணைப்புக்கு மின் கட்டணம் செலுத்தியதிற்கான கணினி நகல் **வா.சா.ஆ.5** ஆகும். 1992 முதல் 2016 வரை தாவா சொத்திற்கான வீட்டு வரி செலுத்தியதற்கான ரசீதுகள் (எண்ணிக்கை –100) அசல் **வா.சா.ஆ.6** ஆகும். 24.04.2018ம் தேதியிட்ட 1–ம் பிரதிவாதி, வாதியின் கணவர் இராமமூர்த்தி பெயரிட்டு அளித்த அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.7** ஆகும்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.